DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 13/2022**

அ.சா. 7

Prosecution witness

(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு வேல்முருகன் | Caste: | |
| Father's Name: | சுப்பிரமணியன் | Calling: | காவல்துணைக் கண்காணிப்பாளர், SBCID விழுப்புரம் சரகம் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 42 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.01.2026.

(1,3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2ம் எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை

நான் தற்போது விழுப்புரம் சரக தனிப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2021ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது எமனேஸ்வரம் காவல் நிலைய கு.எண். 160/2021 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 342 IPC and sec 3(1)(r),3 (1)(s) of SC/ST (POA) Act ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழக்கை புலன் விசாரணை செய்ய இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண். C.No. 19/SJ&HR/RMD/2021, Dated: 22.06.2021 உத்தரவின் மூலம் நியமித்தார். அந்த உத்தரவு **அ.சா.ஆ.6**. பிறகு நான் அன்றே புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான புதுநகர் 1வது தெருவில் 1ம் எதிரி

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.06 12:33:17 +0530

வீட்டு முன்பு சென்று சம்பவ இட சாட்சிகளான நகேஷ், புகழேந்தி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7**. பின்பு அன்றே புகார் கொடுத்த நாகராஜன் மற்றும் சம்பவத்தை பார்த்ததாக சொல்லப்பட்ட ராணி, சுதாகர் ஆகியோர்களையும் பார்வை மகசர் சாட்சிகளான நகேஷ், புகழேந்தி ஆகியோர்களையும் விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். அதே தினம் மாலை 5.30 மணியளவில் பரமக்குடியில் உள்ள புதுநகர் பாலம் அருகே 1ம் எதிரியை கைது செய்து 17.45 மணிக்கு காவல்நிலையம் கொண்டு வந்து பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 2,3 எதிரிகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவுப்படி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுவிட்டதால் கைது செய்யவில்லை. 28.06.2021ம் தேதி எதிரிகள் மற்றும் புகார்தாரர் நாகராஜன் ஆகியோர்களுக்கு சாதிச்சான்று வழங்கும்படி பரமக்குடி வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 02.08.2021ம் தேதி பரமக்குடி வட்டாட்சியர் தமீம்ராஜாவை விசாரித்து சாதிச்சான்றிதழ் பெற்று அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். வட்டாட்சியர் வழங்கிய அறிக்கையில் புகார்தாரர் நாகராஜன் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து குறவர் வகுப்பை சேர்ந்தவர் என்றும், எதிரிகள் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த இந்து மறவர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும் சான்று வழங்கினார். அந்த சான்று **அ.சா. ஆ.8**. பின்பு 18.09.2021 அன்று சாதிச்சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் தமீம்ராஜாவையும், 19.09.2021ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளரையும் விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.06 12:33:23 +0530

பதிவு செய்தேன். பின்பு எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது அதே பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

Thiru. K. John Basha,
Head Clerk,
Judicial Magistrate Court No.II,
Viluppuram.

Thiru. B. Lakshmanan,
Junior Assistant,
PCR Court,
Ramanathapuram.

Co coordinator Remote site

Deponent

Co coordinator Court site

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.06 12:33:27 +0530